


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய வனப் பணி அலுவலர்கள் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவிற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி. நாகநாதன், தலைமையில் சந்தித்து வாழ்த்துப் பெற்று, இயற்கையைப் பாதுகாப்பதில் அரசின் உறுதியான முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இந்திய வனப் பணி அலுவலர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் செயலாளர் திருமதி கே. கீதாஞ்சலி, துணைத் தலைவர் தீபக் பில்கி, செயற்குழு உறுப்பினர்கள் முகமது ஷபாப், போஸ்லே சச்சின் துக்காராம், பிரின்ஸ் குமார், ஈ. பிரசாந்த், திருமதி எஸ். கிருத்திகா, பொருளாளர் ஆர். வித்யாதர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2025) முகாம் அலுவலகத்தில், சிங்கப்பூர் நாட்டின் உள்துறை அமைச்சரும், தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அமைச்சருமான கே. சண்முகம் சந்தித்துப் பேசினார். இந்நிகழ்வின்போது, சென்னையிலுள்ள சிங்கப்பூர் நாட்டு தூதரகத்தின் தூதர் எட்கர் பெங் (THIRU EDGAR PANG), துணைத் தூதர் திருமதி வைஷ்ணவி வாசுதேவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் – பூதலூர் – மருதக்குடி கிராமத்தில் பிள்ளையார் குளத்தில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை. 13-**

**தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமத்தில் உள்ள பிள்ளையார் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமம், திருவேங்கடஉடையான்பட்டியைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். ஜஸ்வந்த் (வயது 8) த/பெ.ஸ்ரீதரன், செல்வன். மாதவன் (வயது 10) த/பெ.கனகராஜ் மற்றும் செல்வன். பாலமுருகன் (வயது 10) த/பெ.செந்தில் ஆகிய மூவரும் 11.7.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் பள்ளிக்குச் சென்றுவிட்டு மருதக்குடி கிராமத்தில் உள்ள ஊரணிகுளம் என்கிற பிள்ளையார் குளத்தில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது பெற்றோர்களுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### அனைத்து மாநகராட்சிகள் – நகராட்சிகள் – பேரூராட்சிகள் –

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் ஆய்வுக்கூட்டம்!

*சென்னை, ஜூலை 13*

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில், அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) பேரூராட்சிகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று நகராட்சி நிருவாக இயக்குநரக அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை விரைந்து முடித்து, சாலை சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொண்டு முடித்திட வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறின்றி பணிகள் மேற்கொள்வதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். எதிர்வரும் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர்நிலைகள், கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூர்வாரி மழைநீர் தங்குதடையின்றி செல்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**தெரு விளக்குகள் பராமரிப்பு!**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயைப் பெருக்குவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், துப்புரவுப் பணி மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும். பொது கழிப்பறைகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

சாலை விரிவாக்கப் பணிகள், மேம்பாலப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது சம்பந்தப்பட்ட துறையினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றி பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கும் குழாய்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாமல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். சாலைகளில் மழைக்காலத்திற்கு முன்னதாக மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து, அங்கு குளிர் தார்க்கலவை கொண்டு சாலை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டங்கள், நீராதாரங்கள் அனைத்தும் முறையாக பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும்.

**ஒரு கோடி பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்!**

மேலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் துறை அலுவலர்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலுவலர்கள் தினசரி கள ஆய்வு மேற்கொண்டு நடைபெற்று வரும் பணிகளை தொடர்ந்து கண்காணித்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் நாளொன்றுக்கு சுமார் 1100 எம்.எல்.டி. பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுமார் 1 கோடிக்கும் மேலான பொதுமக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2071 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளில் உள்ள மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், மீதமுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தங்களது சொந்த பராமரிப்பு மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் சட்டமன்ற அறிவிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை முடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுகாதாரப் பணிகள் முறையாகவும் முழுமையாகவும் நடைபெறுவதை சுகாதாரப் பிரிவு அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். பள்ளிகளில் சுத்தம் மற்றும் சுகாதாரமான காலை உணவு மற்றும் மதிய உணவு வழங்குவதை மண்டல அலுவர்கள் / சுகாதார அலுவலர்கள் தினமும் சென்று பார்வையிட வேண்டும். நகர்ப்புற பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகள் சிறப்பாக சென்றடையும் வகையில் தொடர்புடைய அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் ராஜேந்திர ரத்னூ, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிருவாக இயக்குநர் கே. விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகள் இயக்குநர் எம்.பிரதீப் குமார் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள், மண்டல பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசியலமைப்பு கிளப் நிர்வாகிகள் தேர்தல்!

# கலாச்சாரப் பிரிவு செயலாளராக திருச்சி சிவா ஒருமனதாகத் தேர்வு!



*புதுடெல்லி, ஜூலை 13-*

டெல்லியில் மக்களவைத் தலைவர் தலைமையில் செயல்படும் அரசியலமைப்பு கிளப் (constitution club) நிர்வாகிகளுக்கான தேர்தலில் மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி சிவா செயலாளர் (கலாச்சாரம்) பொறுப்புக்கும், செயலாளர் (விளையாட்டு) பொறுப்பிற்கு BCCI ல் தலைவராக இருக்கும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராஜீவ் சுக்லாவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து, குறிப்பாக தி.மு.கழகத்திலிருந்து இந்த முக்கிய பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா என்பது குறிப்பிடத்தக்கது!

### முதலமைச்சரின் “புதுமைப் பெண்” திட்டத்தால்

# உயர்கல்வி சேர்க்கையில் - மாணவிகள் எண்ணிக்கை 31 சதவீதமாக உயர்வு!

## அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

***சென்னை, ஜூலை 13-***

***முதலமைச்சரின் ‘புதுமைப் பெண்’ திட்டத்தால் உயர்கல்வி சேர்க்கையில் மாணவிகளின் எண்ணிக்கை 31 சதவீதமாக உயர்ந்துள்ளது என உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.***

நேற்று முன்தினம் (11.07.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் சென்னை, குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரி கல்லூரியில் நடைபெற்ற 30வது பட்டமளிப்பு விழாவில் மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-

பெண்கள் தரமான உயர் கல்வி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ஸ்ரீமகாவீர் ஜெயின் கல்யாண் சங்கத்தினரால் 1991-ஆம் ஆண்டு இக்கல்லூரி தொடங்கப்பட்டு, 35 ஆண்டுகளாக சிறப்பான உயர்கல்வியினை வழங்கி வருகிறது. தற்போது, இக்கல்லூரியில் 8 இளநிலை மற்றும் 2 முதுநிலை பாடப் பிரிவுகளில் மொத்தம் 2,473 மாணவிகள் பயின்று வருகின்றனர்.

மாணவிகள் தங்களின் எதிர்காலத்தை வடிவமைத்து உயர்வு பெற அனைத்து செயல்திறன்களையும் கற்றுக் கொடுக்கும் சிறந்த கல்லூரியாக குரு ஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரி செயல்படுகின்றது. மாணவிகளின் சேவை மனப்பான்மையை ஊக்குவிக்கும் விதமாக நாட்டு நலப்பணித் திட்டம், ரோட்டரி குழு. சமூக சேவை குழுமம். இளைஞர் செஞ்சிலுவை சங்கம் என 18 குழுக்கள் இக்கல்லூரியில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கைப்பந்து விளையாட்டில் வெண்கலப்பதக்கமும் மாவட்ட அளவிலான போட்டிகளில் இரண்டாமிடமும் பெற்று விளையாட்டுத் துறையிலும் இக்கல்லூரி யில் மாணவிகள் சிறந்து விளங்கு கிறார்கள்.

தேசிய மாநில அளவிலான துப்பாக்கி சுடும் போட்டிகளில் வி. பிரகதி நேகர் என்ற மாணவி தேசிய அளவில் தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். குதிரையேற்ற போட்டிகளில் ஷகீரா என்ற மாணவி வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். ஆண்டு தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று பட்டம் பெற்று வருகின்றனர். தற்போது பட்டம் பெறும் மாணவிகளில் பல்கலைக்கழக அளவில் 21 மாணவிகள் முதல் பத்து இடங்களைப் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர். இன்று நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் 651 இளங்கலை மாணவிகளும், 13 முதுகலை மாணவிகளும் பட்டம் பெறுகின்றனர்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 41 இலட்சம் மாணாக்கர்கள் பயன் பெற்றுள்ளனர். இக்கல்லூரியில் 1049 மாணவிகள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர், 57 மாணவிகள் முதல் தலைமுறை பட்டதாரிகள், 105 மாணவிகள் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்வி உதவித்தொகை பெறுகின்றனர், 554 மாணவிகள் ஆதிதிராவிடர் கல்வி உதவித்தொகை பெறுகின்றனர். தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புதுமைப் பெண் திட்டத்தால் மாணவிகள் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை 31 சதவீதம் உயர்ந்துள்ளது. தனியார் கல்லூரியாக இக்கல்லூரி அமைந்திருந்தாலும், இக்கல்லூரியில் பயிலும் 1,765 மாணவிகள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது பெருமைக்குரியதாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர் எப்போதும் சிறுபான்மை யினமக்களுக்கு ஆதரவாகப் பேசியும், எழுதியும் வந்தார்கள். சிறுபான்மை மக்களின் பாதுகாவலராகக் கலைஞர் எப்போதும் திகழ்ந்தார். டாக்டர் கலைஞர் அவர்களின் வழித்தடத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நல்லதோர் ஆட்சி நடத்தும் நமது முதலமைச்சர் அவர்கள் மதச் சிறுபான்மையினரையும் மொழிச் சிறுபான்மை யினரையும் தம்மிரு கண்கள் போல் பாவித்து மிகச்சிறந்ததோர் ஆட்சியை நடத்தி வருகிறார்.



நமது முதலமைச்சரின் ஆட்சிக்காலம் சிறு பான்மையின மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியாக இருந்து வருகிறது. ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடைமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த ‘இட ஒதுக்கீடு‘ கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் பெறவில்லை என்றால், பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியைத் தமிழினப் பகைவர்கள் இளங்கலை படிப்பிற்கே கியூட் என்ற நுழைவுத் தேர்வின் மூலம் பறித்துக் கொண்டு விடுவர்.

பொறியியல் கல்விக்கு நுழைவுத் தேர்வு இருந்த காலத்தில் கிராமப்புற மாணவர்கள் சேர்க்கை 25 ஆயிரம் ஆக இருந்தது. பின்னர், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்ட பின்னர் கிராமப்புற மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை77 ஆயிரம் ஆக உயர்ந்தது என்பதை கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறேன். 3,5,8 வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு என்பது இடை நிற்றலையே ஏற்படுத்தும். தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை மாணவர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும்.

இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். இன்று பட்டம் பெறும் மாணவிகளாகிய நீங்கள் இதுவரை, ஒரு மாணவி என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் இருந்திருப்பீர்கள். ஆனால், இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி மனிதராக இந்தச் சமூகம் உற்றுநோக்கும். அதற்கான அடையாளம்தான் இன்று நீங்கள் பெறும் பட்டம். இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளைகுவிக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்து கிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர் பி.கவுதம் வைட், கல்லூரி தலைவர் எம்.ஹரீஷ்சந்த் பெட்டாலா, முதல்வர் டாக்டர் எம்.கே.மாலதி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.